ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பது என் கருத்து. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் கேட்ட கேள்வி, பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு அறைகள் கட்ட உத்தேசமுண்டா என்று கேட்டிருக்கிறேன். பயணிகள் தங்க வசதியில்லை. இவ்வளவு இடம் கட்டியும் வாடகைக்கு ஆள் வரவில்லை, ஏன்? அந்தப் பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குவதற்கு, தண்ணீர் வசதி, சுகாதார வசதி போன்றவற்றிற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமா? அது எந்தக் காலத்திற்குள் செய்யப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே' இந்த அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. ஒன்றரை ஆண்டுகளாக இதிலிருந்து வாடகை வரவில்லை. இதில் அங்கிருக்கக் கூடிய அதிகாரிகள் யாராவது மெத்தனம் காட்டியிருக்கிறார்களா என்பதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று, அப்படி கவனித்துப் பார்த்ததில் இருக்கக்கூடிய அதிகாரிகள் யாரும் மெத்தனம் காட்டவில்லை. அதற்குப்பின்னால் பல்வேறு நிலைகளில் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பின்பு 30-12-1982, 24-1-1983, 28-2-1983, 25-5-1983, 9-9-1983, 24-10-1983, 23-11-1983, 26-12-1983, 22-1-1984, 22-2-1984 ஆகிய தேதிகளில் நாம் விளம்பரப்படுத்தி இருக்கிறோம். யாரிடமிருந்தும் அதற்கான பிணைப்புத் தொகை வரவில்லை. இவ்வளவு நிலைகளிலும் வரவில்லை. ஆகவே, இருக்கக்கூடிய நிலையை அனுசரித்து, அவைகளுக்கு ஒரு பார்டிஷன் வால் அதாவது தடுப்புச் சுவர் போட்டு, பல்வேறு கட்டிடங்களாக மாற்றி, இந்த அமைப்பை உடனடியாக வாடகைக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதுமாதிரி கூட உடனடியாக விளம்பரம் செய்து, நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். பயணிகள் தங்குவதற்கு ஏற்ப, அங்கே அந்த வசதியுள்ள அறைகளைக் கட்டித் தர வேண்டுமென்ற முறையிலே இந்த நகராட்சி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

மதுராந்தகம் நகரத்திலிருந்து விடப்பட்டுள்ள நகரப் பேருந்துகள்.

*491 (*வினா 19561)* திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரத்திலிருந்து எத்தனை நகரப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன?

1984 மார்ச் 28]

(ஆ) மேலும் எத்தனை நகரப் பேருந்துகள் விட மனுக்கள் பரிசீலனையில் உள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மதுராந்தக நகரத்திலிருந்து ஐந்து நகரப் பேருந்துகள் பத்து வழித்தடங்களில் விடப்பட்டுள்ளன.

(ஆ) மேலும் இரண்டு நகரப் பேருந்துகள் விடுவதற்கான மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், மதுராந்தகம் நகரத்தில் 5 பேருந்துகள், நகரப் பேருந்துகள் விடப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்திலேயே மதுராந்தகம் தான் பெரிய தாலுகா, அங்கே சுமார் 430 கிராமங்களுக்கு மேல் அதிகமாக இருக்கின்றன. எல்லாக் கிராமங்களையும் இணைப்பு செய்வதற்கு, நகரப் பேருந்துகள் அதிகமாக விடவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதற்கு பஸ் டிப்போ இல்லாத ஒரு குறைபாடு இருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே மானிய கோரிக்கையின் மீது பேசுகின்றபோது, மதுராந்தகத்தில் விரைவில் பஸ் டிப்போ ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அது ஏற்பட்டால் தான், அங்கே பேருந்துகள் அதிகமாக விடப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆதலால், அதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அங்கே வேண்டுமானால் டிப்போவைப் பொறுத்தவரையில், இடத்தைத் தேர்ந்தெடுத்து, உடனடியாக இந்த நடவடிக்கையை எடுக்கலாம். அதற்காக பேருந்து வசதி செய்து கொடுப்பதில் கால தாமதம் காட்டாமல், பேருந்துகளை விடுவதற்கு போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், மேலும் இரண்டு பேருந்துகள் விடுவதற்கு மனுக்கள் வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அந்த மனுக்கள் எந்தெந்த கிராமங்களிலே இருந்து நகரப் பேருந்துகள் விட வேண்டுமென்று வந்திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எந்தெந்த வழித் தடங்களில் கேட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், இரண்டு வழித் தடங்களில் விட வேண்டுமென்று மனுக்கள் வந்து, அதைப் போக்குவரத்துக் கழகம் இப்போது ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறது.

—492

தொட்டாம்பட்டி, மேலூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்கு மினி பஸ்கள் விடும் திட்டம்.

*வினா எண் 21451—திரு. க. வெ. விராளம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களுக்கு மினி பஸ்கள் விட அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வழித்தடங்களில் எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) பத்து வழித்தடங்களில் மினி பஸ்கள் விட திருவாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை, ஆய்வு செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திரு. க. வெ. வீரானம்பலம் : பேரவைத்தலைவர் அவர்களே, மேலூர், கொட்டாம்பட்டி வழியாக வெள்ளிமலை முருகன் கோவிலுக்கு பேருந்து விட அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதற்கான 10 வழித்தடங்களை நாங்கள் ஆய்வு செய்துகொண்டு வருகிறோம். அதிலே இதையும் சேர்த்து ஆய்வு செய்யலாம் என்று கருதுகிறேன். இந்த ஆய்வு முடிந்த பின்னர், இதைப் பற்றிச் சொல்ல முடியும்.

திரு. எல். இளைய பெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற மனுக்கள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால், மேலூர் தொகுதியிலே அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, நான் அவர்களிடம் சொல்லி, மினி பஸ்கள் விடுகிறார்கள். நீங்கள் மனுக்கள் போடுங்கள், கிடைக்கும்